**Publication: Tamil Murasu, Pg 2**
**Date: 29 January 2024**
**Headline: I will set record in Paris Olympics as well: Shanti Pereira**

# பாரிஸ் ஒலிம்பிக்கிலும் சாதிப்பேன்: சாந்தி பெரேரா

**ரவி சிங்காரம்**

2023ஆம் ஆண்டில் 47 தனி நபர் ஓட்டப்பந்தயங்களில் தேசிய அளவில் 100 மீட்டர் சாதனையை ஆறு முறையும் 200 மீட்டர் சாதனையை நான்கு முறையும் படைத்த சாந்தி, 2024ஆம் ஆண்டிலும் வெற்றிகளைக் குவிக்க ஆயத்தமாகிவிட்டார்.

2023 ஆகஸ்ட் புடாபெஸ்டில் 200 மீட்டர் போட்டியை 22.57 வினாடிகளில் ஓடி தேசிய சாதனை படைத்து 2024 பாரிஸ் ஒலிம்பிக் 200 மீட்டர் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ள சாந்தி, ஒலிம்பிக் 100 மீட்டர் போட்டிக்கும் தகுதி பெறுவதில் நம்பிக்கை கொண்டுள்ளார்.

பாரிஸ் 2024க்குத் தகுதி பெறுவதற்கான இறுதி நாள் ஜூன் 30ஆம் தேதி.

பாதி இடங்கள் நேரத்தின் அடிப்படையிலும் மீதி இடங்கள் உலக வரிசைப் பட்டியலின் அடிப்படையிலும் ஒதுக்கப்படும்.

தமது 100 மீட்டர் தேசிய சாதனை நேரம் 11.20 வினாடிகளாக இருப்பினும், உலகத் தர வரிசையின்படி தகுதிபெற நல்ல வாய்ப்பிருப்பதாகக் கூறினார் சாந்தி.

ஆகஸ்ட் 1 முதல் 11ஆம் தேதிகளில் ‘ஸ்டாட் த ஃபிரான்ஸ்’சில் 80,000 பேர் முன்னிலையில் சிங்கப்பூரின் ஒலிம்பிக் கனவுகளை மெய்ப்பிக்க ஓடுவதற்கு முன்பு, 2023ஐ போலவே 2024 ஏப்ரலிலும் சாந்தி ஐரோப்பிய போட்டிகளுக்குச் செல்லவுள்ளார்.

அதற்கு ஆயத்தமாக, கூடிய விரைவில் ஃபுளோரிடாவில் இருமாத பயிற்சி முகாமை மேற்கொள்ளவுள்ளார்.

ஐரோப்பிய போட்டிகளில் உலகின் தலைசிறந்த ஓட்டப்பந்தய வீரர்களுடன் ஓடும் அனுபவம் ஒருபுறம் கிடைக்க, உலகத் தர வரிசைப் புள்ளிகளைக் குவித்து, பாரிஸ் ஒலிம்பிக் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்துக்குத் தகுதிபெறும் வாய்ப்பையும் அவர் பெறுவார்.

“அவ்வாய்ப்பைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொண்டு தகுதி பெறுவேன் என நம்புகிறேன்,”



வெற்றி, தோல்விகளிலிருந்து கற்றுக்கொண்டதை பகிர்ந்துகொண்டார் சாந்தி.
**படம்: ரவி சிங்காரம்**

என்றார் சாந்தி.

இந்த நம்பிக்கையை சாந்தி, சனிக்கிழமை ஜனவரி 27ஆம் தேதியன்று பிற்பகல் 2 மணி முதல் 3.15 மணி வரை தெம்பனிஸ் வெஸ்ட் சமூக நிலையத்தில் பொதுமக்களுடன் நடந்த சந்திப்பில் அளித்தார்.

இச்சந்திப்புக்கு தெம்பனிஸ் வெஸ்ட் சமூக நிலையமும் தெம்பனிஸ் வெஸ்ட் சமூக விளையாட்டுக் கட்டமைப்பும் ஏற்பாடு செய்தன.

சாந்தியை முன்னுதாரணமாகக் கொண்ட சிறுவர்களும் பெற்றோரும் ரசிகர்களும் அவரைக் காண ஒன்றுதிரண்டனர்.

உற்சாகமாகக் கரவொலி எழுப்பி சாந்தி பெரேராவின் வருகையை மக்கள் வரவேற்றனர்.

ஒரு சுவாரசியமான கேள்வி-பதில் அங்கத்தில் தன் 2024 குறிக்கோள்களைப் பற்றிப் பகிர்ந்தார் சாந்தி.

ஓட்டப்பந்தயத்தில் சிங்கப்பூரின் ஒலிம்பிக் கனவுகளைச் சுமக்கும் அவர், அந்த எதிர்பார்ப்புகளோடு வரும் மன உளைச்சலைச் சமாளிக்கும் மனவுறுதியையும் வளர்த்துக் கொண்டுள்ளதாகக் கூறினார்.

இச்சந்திப்புக்கு சாந்தியின் பெற்றோரும் வந்திருந்தனர்.

rsingaram@sph.com.sg